பொருளாதாரம்

முனைவர் டி.கே.ஜெயராமன்





# இந்தியா எப்போது சிங்கப்பூர், மலேசியா போல பணக்கார நாடாக மாறும்..?

கடந்த நூற்றாண்டில் 1980-களின் நடுப்பகுதியில் சர்வதேச நிதி நிறுவனங்கள் தங்கள் உறுப்பு நாடுகளை ஏழை நாடுகள், பணக்கார நாடுகள் என்கிற வரையறைகளை மாற்றி, புதிதாக வரையறுக்கத் தொடங்கின; குறிப்பாக, உலக வங்கி அதன் உறுப்பு நாடுகளை சலுகைக் கடனளிக்கும் நோக்கத்துக்காக தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் வகைப்படுத்தத் தொடங்கியது.

**நான்கு வகைப்பாடு...**

உலக வங்கி தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் நாடுகளை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தத் தொடங்கியது: 1. குறைந்த வருமானம் (*Low income*); 2. குறைந்த அளவு நடுத்தர வருமானம் (*Low middle income*); 3. மேல் நடுத்தர வருமானம் (*Upper middle income*); 4. அதிக வருமானம் (*high income*)... இந்த நான்கு வருமான வரம்புகள் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படும்.

அட்டவணை 1-ல் (பார்க்க, அட்டவணை 1) நான்கு வகைகளின் வரம்புகளைக் காட்டுகிறது. அட்டவணை 2-ல் இந்தியா, அதன் அண்டை நாடுகள் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சராசரி தனிநபர் வருமானத் தரவுகள் (அமெரிக்க டாலர்களில்) மற்றும் வகைப்பாடுகளைக் காணலாம்.

**நேபாளம் மட்டுமே...**

இந்திய துணைக் கண்டத்தில் நேபாளம் மட்டுமே குறைந்த வருமானம் கொண்ட நாடு என மதிப்பிடப்பட்டுள்ளது. தென்கிழக்கு ஆசியாவில், எந்த நாடும் குறைந்த வருமானம் கொண்ட பிரிவில் இல்லை.

இந்தியத் துணைக் கண்டத்தில் நேபாளம் தவிர, 5 நாடுகளும் குறைந்த நடுத்தர வருமான நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. தென் கிழக்கு ஆசியாவில், சராசரி தனிநபர் அதிக வருமானத்தில் முன்னேறிய ஒரே நாடு சிங்கப்பூர் (67,353 டாலர்) மட்டுமே. இருப்பினும், மேல்நடுத்தர வருமான வகுப்பில் தற்போது 11,830 டாலர் தனிநபர் வருமானத்துடன் மலேசியா அதிக வருமானம் கொண்ட நாடாக உருவாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. 2027-ல் மலேசியாவின் சராசரி தனிநபர்

**அட்டவணை 1: நான்கு வகைகளின் வரம்புகள்..!**

| வகை | தனிநபர் சராசரி வருமானம் (அமெரிக்க டாலரில்) |
|---|---|
| குறை வருமானம் | 1,135 |
| குறை நடுத்தர வருமானம் | 1,136-4,465 |
| மேல் நடுத்தர வருமானம் | 4,463-13,845 |
| உயர் வருமானம் | 13,845 |

வருமானம் 13,385 டாலரைத் தொடும் என எதிர்பார்க்கப்படுகிறது!

**இந்தியா எப்போது தொடும்..?**

தனிநபர் வருமானத்தில் முன்னேறிய நாடுகளை இந்தியா எப்போது நெருங்கும் என்கிற கேள்வியைப் பலரும் எழுப்பி, தீவிரமாகப் பேசி வருகின்றனர். 2007-ம் ஆண்டு இந்தியாவானது கீழ்நடுத்தர வருமான நிலையை அடைந்தது. தற்போது இந்தியாவின் சராசரி தனிநபர் வருமானம் வருமானம் 2,390 டாலர்; நம் நாடு மேல் நடுத்தர வருமான நிலையைத் தொட வேண்டும் எனில், 4,466 டாலர் என்கிற வருவாய் அளவைத் தொட வேண்டும். அது எப்போது என்பதே முக்கியமான கேள்வி.

**மலேசியா, தைவான், கொரியா...**

மலேசியா 1996-ம் ஆண்டு முதல் நடுத்தர வருமானம் பெறும் நாடாகவே உள்ளது. 2027-ம் ஆண்டில் அதிக வருமானம் பெறும் நாடாக மாறி, முன்னேறிய நாடாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, அதிக வருமானம் பெறும் நாடாக மாற மலேசியா 30 ஆண்டுகள் எடுத்துக்கொண்டது. ஆனால், தைவானும் கொரியாவும் குறுகிய காலத்தில் அதிக வருமானம் பெறும் நிலைக்கு முன்னேறின. தைவானை விட கொரியா மிக வேகமாக அதாவது, 10 ஆண்டுகளில் மேல் நடுத்தர வருமான நிலைக்கு மாறியது (1987). பின்னர், கொரியா விரைவாக அதாவது, 8 ஆண்டுகளில் (1988-1995) அதிக வருமானம் பெறும் நிலைக்கு முன்னேறியது. இது 'ஆசிய அதிசய'மாகக் (Asian Miracle) கருதப்படுகிறது.

தொழில்நுட்ப ரீதியாக உயர்ந்த தயாரிப்புகளுக்கான உலகளாவியத் தேவையைப் பூர்த்தி செய்ததன் காரணமாக இந்த இரு நாடுகளும் மிகப் பெரிய வளர்ச்சி கண்டு, முன்னேறின. நன்கு பயிற்சி பெற்ற தொழிலாளர்களுடன் விரைவாகப் பல பொருள்களை இந்த நாடுகள் செய்தன. மாற்றங்களை விரை வாக ஏற்கத் தயாராக இருந்தன. இறக்குமதிக்கான திறந்த வர்த்தகக் கொள்கையை அந்த நாடுகள் ஆதரித்தன. பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டு, அதிக வருமானம் பெறுவதற்கு தைவானும் கொரியாவும் எடுத்த மேற்சொன்ன நடவடிக்கைகளை இந்தியாவும் எடுக்குமா என்பது முக்கியமான கேள்வி.

**இந்தியா செய்ய வேண்டியது என்ன?**

அடுத்த ஏழு ஆண்டுகளில் இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி 9.1% என்ற அளவுக்கு இருக்கும் என கிரிசில் அமைப்பு மதிப்பிட்டுள்ளது. என்றாலும், உற்பத்தித் துறையின் வளர்ச்சியை அதிகரிக்க இன்னும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சி வேகத்தைத் துரிதப்படுத்த வேண்டுமெனில், அனைத்துத் துறைகளிலும் உற்பத்தித் திறனை மேம்படுத்த வேண்டும். கிராமப் புறங்களில் கல்வித் தரத்தை உயர்த்தி, பயிற்சி வசதிகளை மேம்படுத்த வேண்டும். விவசாயத்தில் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

தற்போது மிகச் சிறப்பாக வளர்ந்து வரும் சேவைத் துறையானது, அடுத்த ஏழு ஆண்டுகளில் 6.9% என்ற விகிதத்தில் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் வளர்ச்சியை மேலும் அதிகரிக்க வேண்டும். எலெக்ட்ரானிக்ஸ், எரிசக்தி மற்றும் மின்சார வாகனங்கள் (EVs) போன்ற துறைகள் மற்ற துறைகளுடன் ஒப்பிடும்போது வேகமாக வளர்ந்து வருகின்றன. எதிர்காலத்தில் பொருளாதாரத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிப்பவையாகவும் இந்தத் துறைகள் உள்ளன. இந்தத் துறைகளில் முதலீடுகள் 2023 மற்றும் 2024-ல் மூலதனச் செலவில் 16% பங்களித்தன. சேவைத் துறை இன்னும் சிறப்பாக வளர்த்தெடுப்பதன் மூலம் நம் மக்களின் தனிநபர் வருமானம் கணிசமாக உயர வாய்ப்புள்ளது.

**தேவை, தொழிலாளர் சீர்திருத்தம்...**

இந்தியாவின் பொருளாதாரத்தை மேம்படுத்த பல முக்கியமான விஷயங்களைச்

அட்டவணை 2: நாடுகளின் சராசரி தனிநபர் வருமானம்..!

| நாடுகள் | தனிநபர் சராசரி வருமானம் (அமெரிக்க டாலரில்) | வகை |
|---|---|---|
| **இந்தியா மற்றும் அண்டை நாடுகள்** | | |
| பங்களாதேஷ் | 2,820 | குறை நடுத்தர வருமானம் |
| பூட்டான் | 3,290 | குறை நடுத்தர வருமானம் |
| இந்தியா | 2,390 | குறை நடுத்தர வருமானம் |
| நேபாளம் | 1,090 | குறை வருமானம் |
| பாகிஸ்தான் | 1,692 | குறை நடுத்தர வருமானம் |
| இலங்கை | 3,290 | குறை நடுத்தர வருமானம் |
| **தென்கிழக்கு ஆசிய நாடுகள்** | | |
| கம்போடியா | 1,690 | குறை நடுத்தர வருமானம் |
| இந்தோனேசியா | 3,953 | குறை நடுத்தர வருமானம் |
| மலேசியா | 11,830 | மேல் நடுத்தர வருமானம் |
| பிலிப்பைன்ஸ் | 3,950 | குறை நடுத்தர வருமானம் |
| வியட்நாம் | 3,240 | குறை நடுத்தர வருமானம் |
| சிங்கப்பூர் | 67,353 | உயர் வருமானம் |

செய்தாக வேண்டும். முதலில், உள்நாட்டு மற்றும் சர்வதேச வணிகத்தை எளிதாக செய்வதற்கான சீர்திருத்தங்களை இன்னும் அதிக அளவில் கொண்டுவர வேண்டும்.

தொழிலாளர் உள்ளிட்ட துறைகளில் பல சீர்திருத்தங்கள் (*Labour reforms*) நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஜூலை 1 முதல் புதிய தொழிலாளர் குறியீடுகளை (*Code*) அமல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால், 23 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மட்டுமே ஊதிய விதிகளின்கீழ் வரைவு விதிகளை வெளியிட்டுள்ளன. தொழிலாளர் புதிய சட்டங்களின்படி, நிறுவனங்களில் தொழிலாளர் செய்யும் வேலை நேரத்தை ஒரு நாளைக்கு 8-9 மணி நேரத்தில் இருந்து 12 மணி நேரமாக அதிகரிக்கலாம். தவிர, புதிய ஊதியக் குறியீட்டின்கீழ் ஒரு பணியாளரின் மொத்த மாதச் சம்பளத்தில் குறைந்தபட்சம் 50% அடிப்படைச் சம்பளமாக இருக்கும் என்பதால், ஊழியர்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் சம்பளமும் கணிசமாக அதிகரிக்கும். இது பணியாளர்கள் மற்றும் முதலாளிகள் வழங்கும் பி.எஃப் பங்களிப்புகளையும் அதிகரிக்கும். இதனால் பணியாளர்களுக்கான ஓய்வூதிய கார்பஸ் மற்றும் பணிக்கொடை தொகை அதிகரிக்கும்.

**மாநில அரசுகள் மனது வைக்க வேண்டும்...**

ஊதியங்கள், சமூகப் பாதுகாப்பு, தொழில் துறை உறவுகள், தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் வேலை நிலைமைகள் என 29 மத்திய தொழிலாளர் சட்டங்கள் புதிதாக உருவாக்கப்பட்டு, அவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டும்விட்டன. ஆனால், அரசியல் அமைப்பின் ஒருங்கிணைந்த பட்டியலில் சில மாநிலங்கள் புதிய குறியீடுகளின்கீழ் விதிமுறைகளை அறிவிக்காமலே உள்ளன. இவற்றை விரைவாக அறிவிக்கப்பட வேண்டும். தொழிலாளர் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் தாமதம் இந்திய மக்களின் தனிநபர் வருமானம் அதிகரிக்கப் பெரும் தடையாக இருக்கும். இதற்கு மத்திய - மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே..!"